## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்

2025 ஆம் வருடம் நவம்பர் மாதம் 25-ஆம் நாள், செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் கார்த்திகை மாதம் 09-ம் நாள் செவ்வாய்க்கிழமை

**இ.ம.எண்.02/2025 இன் அ.வ.எண்.70/2024**

1) செல்வி

2) மகேஷ்

3) மாசானம்

4) ராஜம்மாள் ... மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

/எதிர்/

இசக்கியம்மாள் ... எதிர்மனுதாரர் /வாதி

இம்மனுவானது 04.11.2025 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.S.ஞானசேகர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.தங்ககிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.12.02 12:17:12 +0530

## உத்தரவு

மனுதாரரால் இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 ன்கீழ் 04.01.2025 அன்று மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:**

அசல் வழக்கில் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய 04.01.2025 ல் வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றைய தினம் மனுதாரருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் இந்நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை, எனவே மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியவில்லை. எனவே, மனுதாரருக்கு எதிராக 04.01.2025 ல் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர்கள் தரப்பில் 04.01.2025 ல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டி இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்சாற்றுரையின் சுருக்கம்

மனுதாரரின் மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கது அல்ல. மனுதாரர்களால் அசல் வழக்கினை காலம்கடத்த வேண்டுமென்ற கெட்ட

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.12.02 12:17:22 +0530

எண்ணத்தில் மனுதாரர் வேண்டுமென்றே இவ்வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு தற்சமயம் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரருக்கு உடல்நலம் சரியில்லை என காரணம் தெரிவிக்கப்பட்ட போதிலும், மேற்படி காரணத்தை நிரூபிக்க ஆவண சான்றுகள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**<u>இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?</u>**

3. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் 04.01.2025 ல் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததற்கு மனுதாரருக்கு உடல்நலம் சரியில்லை என காரணம் தெரிவிக்கப்பட்ட போதிலும், மேற்படி காரணத்தை நிரூபிக்க வாய்மொழி மற்றும் ஆவண சான்றுகள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

இருப்பினும், அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கின் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்காகவும், மனுதாரர்களுக்கு வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதாலும், மனு தள்ளுபடி செய்யபட்டால் மனுதாரர் பாதிக்கப்படுவார் என்பதாலும், அதனால் பல மனுக்கள் தாக்கல் செய்ய நேரிடும். மனு அனுமதிப்பதினால் எதிர்மனுதாரருக்கு எந்த தீங்கும் ஏற்படாது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.12.02 12:17:31 +0530

இறுதியாக, இம்மனுவானது ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மேற்படி தொகையை எதிர்மனுதாரர் / வாதிக்கு நேரடியாக 08.12.2025 தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 09.12.2025.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ம் வருடம் நவம்பர் மாதம் 25-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.12.02 12:17:37 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்- இல்லை

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.12.02 12:17:42 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

முு.மா.உ.நீதிமன்றம், வள்ளியூர்,

வரைவு, சீரான உத்தரவு

இ.ம.எண்.02/2025 இன்

அ.வ.எண்.70/2024

தேதி.25.11.2025